1971 ஜூன் 24] [திரு. மு. கருணாநிதி]

சொல்லப் போனால் பாகிஸ்தானில் இந்தியாவின் முதல் ஹைகமிஷனராகவும் பொறுப்பேற்றிருந்து, அதன் பின்னர்தான் தமிழக மாநிலத்தின் ஆளுநராக இருந்து, 1956-ஆம் ஆண்டில் இருந்து 1962 வரை மராட்டிய மாநிலத்தின் ஆளுநராகவும் பொறுப்பேற்று இருந்து தம்முடைய கடமைகளைச் செவ்வனே ஆற்றிவந்தவர்கள் ஆவார்கள்.

திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் கலை உள்ளம் படைத்தவர்கள். நல்ல கட்டுரை எழுதும் திறன் வாய்ந்தவர்கள். கருத்துக்களை மிகத் தெளிவாகக் கட்டுரை வடிவிலே வடித்துத் தந்து அவை ஏடுகளிலே வந்ததைக் கண்டு அவருடைய சிந்தனையோட்டத்தைப் பலமுறை பாராட்டியிருக்கிறோம். மத்திய அரசு அமைப்பு, மாநில அரசுகள் அமைப்பு இவைபற்றியெல்லாம் அவர் புதிய சிந்தனைகளைச் செய்தார். மொழிப் பிரச்சினையில் அவர் புதிய கண்ணோட்டத்தை இந்திய மக்கள் பெற வேண்டுமென்று அரிய ஆலோசனைகளையெல்லாம் தந்தார். அப்படிப்பட்ட நல்ல பண்பாளர், வித்தகர், இன்றையதினம் இயற்கையால் நம்மிடமிருந்து பிரிக்கப்பட்டது நாட்டிற்கு ஏற்பட்ட பெரியதோர் இழப்பாகும். அவருடைய பிரிவை எண்ணி வருந்துகின்ற நேரத்தில் இந்த மாமன்றத்தின் சார்பில் அவையின் முன்னவரும், கல்வியமைச்சருமான நாவலர் அவர்கள் முன்மொழிந்துள்ள இரங்கல் தீர்மானத்தை நானும் வழிமொழிந்து, மறைந்த அன்னாருடைய குடும்பத்தாருக்கு தமிழகத்தின் சார்பில் ஆழ்ந்த, இதயமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அவையின் முன்னவரும், மற்றும் கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கலோடு, என்னுடைய வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அனுதாபத் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையிலும், மறைந்த பெரியாருக்கு அனுதாபத்தைத் தெரிவிக்கும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்க, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்ட இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

ஆட்டோ ரிக்ஷாக்கள், வாடகைக்கார்கள் கட்டண உயர்வு

*1 குறுகிய கால வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள, ஆட்டோ ரிக்ஷாக்கள், வாடகைக் கார்களுக்கான கட்டணங்களை உயர்த்திக் கொள்வதற்கு அனுமதியளிக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(இ) ஆட்டோ-ரிக்ஷா, வாடகைக் கார் இவற்றிற்கான பயணக்காசு விகிதங்களை மாற்றியமைப்பது பற்றிய ஒரு அறிவிப்பு தமிழக அரசிதழில் வெளியாகியுள்ளது. அதில் பொதுமக்களின் கருத்துக்களும் மறுப்புகளும் கேட்கப்பட்டுள்ளது. அறிவிப்பு வெளியான முப்பது நாட்கள் காலக்கெடுவுக்குப் பின்னர் மேற்படி அறிவிப்பில் கண்டுள்ள பயணக்காசு விகிதங்கள் பற்றி இதனுல் பாதிக்கப்படக்கூடியவர்களின் பிரதிநிதிகளிடமிருந்து வரக்கூடிய கருத்துக்களையும், மறுப்புக்களையும் நேரிடையாக அவர்கள் தெரிவிக்கக்கூடியவைகளையும் கேட்டு, அரசு, மாநில போக்குவரத்துத் துறையுடன் கலந்து ஆராயும்.

	நடை முறைக் கட்டணம்.	மாற்றியமைக்கும் கட்டணம்,
ஆட்டோ ரிக்ஷா :		
1. ஒரு கிலோ மீட்டர்	29 பைசா	25, பைசா
2. குறைந்த கட்டணம்	35 ,,	40 ,,
3. காத்திருக்கும் கட்டணம் (5 நிமிடம்)	5 ,,	5 ,,
வாடகைக்கார் :		
1. ஒரு கிலோ மீட்டர்	40 ,,	50 ,,
2. குறைந்த கட்டணம்	70 ,,	1 ரூபாய்
3. காத்திருக்கும் கட்டணம் (5 நிமிடம்)	10 ,,	10 பைசா

மீட்டர் :
ஆட்டோ : மீட்டர் 40 பை. 2 கிமீ. 1 மீட்டர் 50 பைசா
5 பைசா ஒவ்வொரு ¼ கிமீ. 2 கி.மீ. 5 பைசா 1/5 கிமீ.
வாடகைக்கார் : 10 பைசா ¼ கி.மீ. 10 பைசா 1/5 கிமீ.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோல் விலை ஏறிக்கொண்டே போவதால் ஆட்டோ ரிக்ஷாவுக்கு 35 பைசா என்றிருப்பதை 50 பைசாவாகவும், வாடகைக் கார்களுக்கு ஒரு ரூபாய் ஆகவும் வாடகைக் கட்டணம் நிர்ணயிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினருடைய கருத்து ஆலோசிக்கப்பட்டு, முடிவெடுக்கப்படும் சமயத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

Dr. H. V. HANDE : Are the Government aware of the fact that this amount of increase has been forced on us indirectly by the heavy taxation measure of 22 paise on each litre of petrol? In view of the fact that it is a fait accompli practically because of the extraordinary tax rises by the Central Government will the Hon. Chief Minister or the Cabinet of this State impress upon the Central Government that before such heavy taxation measures are introduced, as the Hon. Chief Minister constantly says that

1971 ஜூன் 24]

he should be consulted in several important matters, it is better if the Hon. Chief Minister of this State is taken into confidence and then this 22 paise of extra taxation imposed in the State?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அண்மையில் மத்திய சர்க்கார் பெட்ரோல் மீது வரி விதித்ததற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. கிட்டத்தட்ட கட்டணங்களின் விகிதாசாரம் மாற்றி 10, 11 ஆண்டுகளாகின்றன. தமிழ்நாட்டிலே ஆட்டோ-ரிக்ஷா தொழிலாளர் சங்கத்தினரும், ஆட்டோ-ரிக்ஷா உரிமையாளர் சங்கத்தினரும் கூடிப்பேசி, பலமுறை விவாதித்து கேட்டுக்கொண்டதன்பேரில் மே மாதம் 21-ம் தேதியன்றுதான் இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. கார்களின் விலையும், ஸ்பேர் பார்ட்ஸ்களின் விலையும், பெட்ரோல் விலையும் ஆண்டுக்காண்டு கூடுவதால், இந்தக் கட்டண விகிதத்தை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

திருமதி. த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, பெட்ரோல் மீது வரியை மத்திய அரசாங்கம் போட்டதனுல் பணக்காரர்கள் தான் பாதிக்கப்படுகிறுர்கள் என்று சொன்னுர்கள். ஆட்டோ ரிக்ஷா, வாடகைக்கார் போன்றவற்றில் ஏழைமக்கள்தான் அதிகமாகப் போகிறுர்கள். ஆகவே, ஏழைமக்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்து, கட்டணத்தை ஏற்றுமல், அதற்கான தொகையை அரசாங்கமே சப்சிடியாக கொடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்படியெல்லாம் வரி விகிதங்களை ஏற்றுவதற்கும் நமக்கும் சம்பந்தமில்லை. இதற்கு சப்சிடி ஒன்றும் இல்லை. பம்பாயிலே கூட அதிகமாக கட்டணத்தை ஏற்றியிருக்கிறுர்கள். நேற்றைய தினத்திலிருந்து அவர்கள் அதிக கட்டணத்தை வசூலித்துக் கொண்டிருக்கிறுர்கள்.

திரு. எம். செல்வராஜ்: தலைவர் அவர்களே, நீண்டகாலமாக அதாவது பத்து பதினைந்து வருஷங்களாக பழைய வண்டிகளே டாக்சியாக ஓடிக்கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட பழைய வண்டிகளைத் தடை செய்யும் எண்ணம் அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்து அரசின் யோசனையில் இருக்கிறது. 1940-ம் ஆண்டிலிருந்து சில வண்டிகள் டாக்சியாக ஓடிக்கொண்டிருக்கின்றன. வண்டி வாங்கிய தேதியிலிருந்து, அது பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து பத்தாண்டுக் காலத்திற்கு டாக்சியாக ஓட்டலாம். பிறகு அதைத் தடை செய்யலாம், என்ற ஒரு யோசனை பரிசீலனையில் உள்ளது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஆட்டோ-ரிக்ஷா, வாடகைக் கார்களின் கட்டணம் உயர்த்த வேண்டுமென்று சொன்னுர்கள். வாடகைக் கார் என்றுல் அதிலே ஸ்டாண்டர்டு

கார் இருக்கிறது, அதில் 3 பேர்தான் உட்காரலாம். மற்றும் பியட், அம்பாசிடர் கார்களில் 4 பேர்கள் உட்காரலாம். ஆகவே, வாடகைக் கார்களிலே இந்த வேறுபாடு இருக்கிற காரணத்தாலே ஸ்டாண்டர்டு மோட்டாருக்கு வாடகைக் கட்டணம் 70 பைசா என்றும், அம்பாசிடர், பியட் போன்ற நான்கு பேர்கள் உட்காரக் கூடியவற்றிற்கு புதிய விகிதத்தையும் அமல்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் முடிவு எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, புதிய கட்டண விகிதங்கள் எல்லா டாக்சிகளுக்கும் பொருந்தும். டாக்சி உரிமையாளர்களின் கோரிக்கையின்படிதான் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, ஆட்டோ-ரிக்ஷா, வாடகைக் கார் உரிமையாளர் வேறாகவும், கார்களை ஓட்டு கின்றவர்கள் வேறாகவும் இருக்கின்ற காரணத்தால், கட்டண விகிதத்தின் பலன் உரிமையாளருக்குத்தான் கிடைக்கிறது. கார்களை ஓட்டுகின்ற தொழிலாளர்களுக்குப் பலன் கிடைப்பதில்லை. ஆகவே, கட்டணத்தை மாற்றும்போது, தொழிலாளர்களுக்குப் பலன் கிடைக்கிற வகையில் கட்டண விகிதத்தை மாற்றியமைக்க அரசு வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு தொழிற்சங்கத்திலுள்ள நடவடிக்கைகள் அனைத்தும் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். தொழிலாளர்கள் எப்போதும் உரிமையாளர்களோடு ஒப்பந்தம் செய்துகொள்கின்ற வழக்கம் இருந்து வருகிறது. எவ்வளவு கலெக்ஷன் ஆகிறதோ அதில் இவ்வளவு பேட்டா என்று ஒப்பந்தம் இருக்கிறது. சுமார் பத்து ரூபாய் கிடைக்கிறதென்றால் அதில் இரண்டு அல்லது மூன்று ரூபாய் தொழிலாளிக்கு உண்டு. ஒப்பந்தத்தின் பேரில் தான் நடந்துகொண்டு வருகிறார்கள். கிடைக்கும் பலன் வெவ்வேறாக இருக்கக்கூடாது என்பதற்காகவே, வண்டியின் உரிமையாளரும் ஓட்டுபவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் கூட்டுறவு முறையிலே ஒரு நல்ல திட்டத்தை அரசாங்கம் வகுத்துத் தந்திருக்கிறது. நமது மாண்புமிகு அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் கூட கூட்டுறவுச் சங்கத்திலுடைய தலைவராக இருந்து நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறார்கள். நம்முடைய முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் இப்பொழுது அதை நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். கூட்டுறவு முறையை ஊக்குவிக்க அரசாங்கம் வழிவகை செய்யும்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறும்போது வாடகைக் கார்களுக்கும், ஆட்டோ ரிக்ஷாக்களுக்கும் வாடகையை உயர்த்த திட்டம் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அதேபோல, பஸ்களினுடைய

1971 ஜூன் 24]

ஸ்பேர் பார்ட்ஸ்கள், டீசல் ஆயில், பெட்ரோல் போன்றவைகள் விலை ஏறியிருப்பதால் அரசுப் போக்குவரத்திலும் கட்டணங்களை உயர்த்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பஸ்களிலே பயணம் செய்பவர்கள் சமுதாயத்தினுடைய அடித் தளத்திலுள்ள மக்கள். இந்தச் சர்க்கார் அவர்களால் உருவாக்கப் பட்ட அரசு. கட்டணத்தை உயர்த்துவதைப்பற்றி எந்தத் திட்டமும் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தற்போது இல்லை.

திரு. எ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, சென்னை மாநகரத்திலுள்ள பஸ் போக்குவரத்தை நாம் தேசியமயமாக்கி யிருக்கிறோம். அதேபோல் இங்கு ஓடும் டாக்சி கார்களையும் ஆட்டோ ரிக்ஷாக்களையும் தேசியமயமாக்க இந்த அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அத்தகைய திட்டம் எதுவுமில்லை.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: தலைவரவர்களே, மத்திய சர்க்காரால் பெட்ரோலின் விலை உயர்வாகியிருக்கிறது. ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு மாகாண சர்க்கார் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று என் மரியாதைக்குரிய சகோதரி அவர்கள் குறிப்பிட்டபொழுது என்னுடைய நினைவிற்கு வந்தது. தன்னைப் பெற்ற தாய் கிண்ணிப் பிச்சை எடுக்கும் பொழுது தம்பி கும்பகோணத்தில் கோதானம் செய்தானும் என்று ஒரு பழமொழி உண்டு. பட்ஜெட்டில் நமக்கே துண்டு விழுகிறது. அவர்கள் நம்மை கவனிக்க மாட்டேனென்கிறார்கள் என்று சதா அழுதுகொண்டு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிற பொழுது இந்தத் தொகை நம்முடைய மாகாண சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறுவது எனக்கு விசித்திரமாகவும், விபரீதமாகவும் இருக்கிறது. ஆகையால் எந்த வழியில், இம்மாதிரியாக இந்த பட்ஜெட்டில் எப்படி நிறைவேற்ற வேண்டுமென்று அம்மையார் அவர்கள் சர்க்காருக்குக் காரணம் கூறுகிறார்கள் என்று அறிய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அம்மையார் அவர்கள் அமைச்சர் அல்ல.

திரு. கி. பொன்னுமலை : தலைவரவர்களே, வாடகைக் கார் களுக்கு வாடகையை மட்டும் உயர்த்திவிட்டார்கள். ஆனால் அவர்கள், குறிப்பிட்ட இடங்களுக்குக் கார்களை ஓட்டிச் செல்ல வேண்டுமென்றால் வருவது இல்லை. சென்ட்ரல் ஸ்டேஷனலிருந்து நமது ஹாஸ்டலுக்கு வர வேண்டுமென்றால் மணிக்கணக்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டியதாகயிருக்கிறது. இன்று

காலையில்கூட ஹாஸ்டலிலிருந்து கோட்டைக்கு வருவதற்கு கம்மி வாடகை என்று வருவதில்லை. எனவே அதற்கும் வழி செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்தக் கட்டணம் உயர்த்தப்படுவதன் காரணமாக தொழிலாளர்கள் அதிலே முழு ஒத்துழைப்பு தருவார்கள் என்று இந்த அரசு எதிர்பார்க்கிறது. அப்படி ஏதேனும் தவறுகள் நடந்தால் புகார் செய்வதற்கு அங்கத்தினருக்கு முழு உரிமை இருக்கிறது.

திரு. கே. ஆர். கிருஷ்ணன்: தலைவரவர்களே, பெட்ரோல் விலை ஏறுவது போல் டீசல் விலையும் ஏறுகிறது. எனவே, அதைப்பயன் படுத்தி டிராக்டர் வைத்துக்கொண்டிருக்கும் விவசாயிகள் பயன் படுத்த அதற்குச் சலுகை வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, டிராக்டருக்கும், போக்குவரத்துத் துறைக்கும் இப்பொழுது சம்பந்தம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, கட்டணங்கள் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கும், டாக்சிகளுக்கும் உயர்த்தப்பட்டதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படியானால் தொழிலாளர் களுக்கு ஏற்கனவே வசூலில் ஐந்தில் ஒன்று என்பதை நான்கில் ஒன்று என்று மாற்றுமா? மேலும் அரசு டாக்சிகள் நடத்துவது என்பது புதிதல்ல. உத்தரப்பிரதேசத்தில் நைனிடாலுக்கு அம்மாதிரி டாக்சிகள் அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். அந்த முறையில் உதகமண்டலம் கொடைக்கானல் போன்ற பகுதிகளுக்கு சர்க்காரே கோயம்புத்தூர், மதுரை போன்ற இடங்களிலிருந்து அனுப்ப ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தை இப்பொழுது ஏற்றுக்கொள்வதற்கில்லை.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, கிலோவிற்கு 50 பைசா என்று நிர்ணயம் செய்து வைத்திருக்கிறார்கள். ஆனால் சில நேரங்களில் பாதி கிலோவை நாங்களே தள்ளிக்கொண்டு போகிறோம். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் ஏதாவது சலுகை உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அதற்காகத்தான் அத்தகைய வண்டிகளுக்கு அனுமதி வழங்கலாமா என்பதைப்பற்றி அரசு பரிசீலனை செய்கிறது.

திரு. என். கணபதி: தலைவரவர்களே, டீசல் விலை லிட்டருக்கு 3 பைசா என்று உயர்த்தியபொழுது பெட்ரோல் விலை மட்டும் ஏன் 20 பைசா என்று உயர வேண்டும்? இந்த 20 பைசாவால் பாதிக்கப்படுபவர்கள் உயர் மட்டத்தில் இருப்பவர்கள் அல்ல.

1971 ஜூன் 24]

உயர் மட்டத்தில் இருப்பவர்கள் எப்படியோ வாங்கிவிடுகிறார்கள். ஏழை எளிய மக்கள் டாக்சிகளிலும், கார்களிலும் போகாத காரணத்தால் எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. நடுத்தர மக்களைப் பாதிக்கும் இந்த விலை உயர்வைப் பற்றி மத்திய அரசுக்கு நம் மாநில அரசு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே தெரிவித்தபடி நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் இது ஒன்றும் அதிகப்படியான கட்டணம் அல்ல. மகாராஷ்டிரத்தில், பம்பாயில் மினிமம் கட்டணமே 1-30 பைசா. ஒரு கிலோ மீட்டருக்கு 60 பைசாவாக்கி இருக்கிறார்கள். நாம் 50 பைசா என்று நிர்ணயம் செய்திருக்கிறோம். பொது மக்களினுடைய எண்ணங்களையும், நல்ல கருத்திலே கொண்டுதான் இந்தக் கட்டணங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. மத்திய சர்க்கார் ஏற்றியதால் இது வந்தது என்ற எண்ணத்திலே தெரிவிக்கிறார்கள் என்று கருதுகிறேன். இது அதற்கு முன்பே கெஜட்டில் வெளியிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, now that there is no increased Central tax imposed on diesel oil and only a small tax has been imposed by the State Government in the form of sales tax, is there any reason for increasing the hire charges of vehicles using diesel oil?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The question may be put in the Lok Sabha.

திரு. ந. தருமலிங்கம்: தலைவரவர்களே, திருக்கோயிலூரிலிருந்து கள்ளக்குறிச்சிக்குப் போக வேண்டுமானால் தனியார் துறை பஸ்கள் இந்த ரூட்டுகளில் சென்றாலும் பொதுமக்கள் நெருக்கடியால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இப்பொழுது தமிழக போக்குவரத்துப் பேருந்து ஒன்றை அந்த ரூட்டுகளிலே போகுமாறு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இது டாக்சிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் பற்றிய கேள்வி.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, டாக்சிகளுக்கும், ஆட்டோ ரிக்ஷாக்களுக்கும் சார்ஜை உயர்த்துவதால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசு அறியுமா? அது குறித்து பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பொதுமக்கள் அதிகமாகப் பாதிக்கப்படமாட்டார்கள். 30 நாட்கள் டைம் கொடுத்து பொதுமக்கள் இதைப்பற்றி ஏதாவது கருத்து

அறிவிக்க வேண்டியிருந்தால் அறிவிக்கலாம் என்று சொல்லி யிருக்கிறோம். Madras Bus passengers Association மட்டும் இந்த டாக்சிகளின் சொந்தக்காரர்கள், டிரைவர்கள், அதே போன்று பயணம் செய்பவர்கள் ஆகியவர்களை வைத்து ஒரு கான்ஃபரன்ஸ் நடத்தி, அதன் மூலம் இத்தகைய கட்டணங்களை உயர்த்த வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். இந்த 30 நாள் தவணை ஜூலை மாதம் முதல் தேதியோடு முடிவடைகிறது. அதற்குப்பிறகுதான் இதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு, டாக்சிகளுக்கு கட்டணம் உயர்த்தப்பட்ட பின்பு, இப்பொழுது ஆட்டோரிக்ஷாக்கள் இவைகளில் மீட்டர் சரியாக ஓடுவதில்லை. இதனால் பொதுமக்களுக்கும் வண்டி ஓட்டுபவர்களுக்கும் தகராறு ஏற்படுகிறது. இதைப்போக்கும் முறையில் கட்டண மாறுதலுக்குப் பிறகு மீட்டர்கள் சரியாக ஓடுகின்ற முறையில் மாறுதல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன யோசனையையும் அரசாங்கம் கவனத்திற்கொண்டு நிறைவேற்றும்.

CentreqStateRelations Inquiry Committee.

*36 Q.—Dr. H. V. HANDE
THIRU A. SWAMIDHAS
THIRU K. T. THANGAMANI
THIRU S. DURAISAMY

Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government has appointed a three man commission to go into the sharing of powers between Central and State Governments; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

(அ) ஆம்.

(இ) 1969-ம் ஆண்டு செப்டம்பரில் டாக்டர் பி. வி. ராஜமன்னார் அவர்களைத் தலைவராகவும், திரு. பி. சந்திரா ரெட்டி, டாக்டர் ஏ. எல். முதலியார் ஆகியோரை ஏனைய உறுப்பினர்களாகவும் கொண்ட "மத்திய-மாநில உறவுகள் ஆய்வுக்குழு" என அழைக்கப்படும் ஒரு குழுவினை அரசு அமைத்தது. அரசியலமைப்பில் தற்போதுள்ள விதித்துறைகளை ஆய்ந்து இம்மாநிலத்தின் நிதிவாயில்களைப் பெருக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பற்றியும், நாடு முழுவதிலும் ஒருமைப் பாட்டிற்கு ஊறு நேராத வகையில் மாநிலத்தின் நிர்வாகம், சட்ட மன்றம், (உயர்நீதி மன்றம் உள்ளிட்ட) நீதித்துறை இவற்றில் பெருமளவிற்குச் சுயாட்சி உரிமைகளை அடைவதற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பற்றியும் கருத்துரை வழங்கும்படி அக்குழு வேண்டப்பட்டது. குழு தனது அறிக்கையை 1971,